கனம் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.
முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
கூடுதல் மாவட்ட உரிமையில் நீதிபதி,
திருமங்கலம்.

2025ம் வருடம் ஏப்ரல் மாதம் 08ம் தேதி செவ்வாய்கிழமை
இடைநிலை மனு எண்.3/2025
மற்றும்
இடைநிலை மனு எண்.4/2025
இன்
அசல் வழக்கு எண்.62/2020
* * * *

சீராளன் (எ) முகமது வகாப் ... மனுதாரர்/வாதி

/ எதிர்/

மகாலிங்கம் (எ) முகமது உசேன் ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இறுதியாக இம்மனுக்கள் 01.04.2025ல் இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக வந்த போது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.அடைக்கலம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.M.செந்தில்குமார் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைக்கு போதிய வாய்ப்பளித்தும், மனு, எதிருரை மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன்

பரிசீலனையின் கீழ் இருந்து வந்த வழக்கில் இன்று திறந்த நீதிமன்றத்தில் பிறப்பிக்கும்...

## பொதுவான உத்தரவு

மனுதாரர்/வாதி தரப்பில் CPC பிரிவு 151ன் கீழ் அசல் வழக்கில் மனுதாரர்/வாதி தரப்பில் முடிக்கப்பட்ட சாட்சி விசாரணையை மீண்டும் re–open செய்யவும், மனுதாரர்/வாதி தரப்பு சாட்சியான வா.சா.1ஐ மீண்டும் recall செய்து மனுதாரர்/வாதி தரப்பு ஆவணத்தை குறியீடு செய்யவேண்டியும் கட்டளை 18 விதி 17 மற்றும் 151 CPCன் கீழ் இந்த இரண்டு மனுக்களானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1) **இம்மனுக்களில் தீர்மானிக்கவேண்டிய பிரச்சனை யாதெனில்? இம்மனுக்கள் சட்டப்படியாக நிலைநிற்கத்தக்கதா? என்பதேயாகும்.**

1.1) மனுதாரர்/வாதி தரப்பு மனுவில், இந்நிர் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் மனுதாரர்/வாதிக்கு வழக்குச்சொத்தை பொறுத்து எழுதிக் கொடுக்கப்பட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை மனுதாரர்/வாதி தரப்பு ஆவணமாக குறியீடு செய்யவேண்டி மனுதாரர்/வாதி தரப்பு சாட்சியை

மீண்டும் reopen செய்து மேற்படி ஆவணத்தை குறியீடு செய்யும்விதமாக வா.சா.1ஐ மீண்டும் recall செய்யவேண்டி இந்த இரண்டு மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

1.2) இந்நிலையில், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்த எதிருரையில், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் எப்போதும் வாதிக்கு ஆதரவாக மேற்படியான ஆவணத்தை எழுதிக்கொடுக்கவில்லை என்றும், மேற்படியான ஆவணமானது மனுதாரர்/வாதியால் மோசடியாக உருவாக்கப்பட்டது என்பதால் இந்நிர் எதிர்மனுதாரர்/வாதியால் உருவாக்கப்பட்டது என்ற காரணத்தால் மேற்படி ஆவணத்தை குறீயிடு செய்வதற்கு இந்நிர் எதிர்மனுதாரர்/பிரதிவாதி ஆட்சேபனை செய்தததாகவும், எனவே இந்நிலையில், மேற்படியான மோசடியான ஆவணத்தை குறியீடு செய்வதற்காக வா.சா.1ன் விசாரணையை மீண்டும் reopen செய்வது வழக்கின் காலதாமத்தை ஏற்படுத்தும் செயலாகும் என்றும், மேலும் மேற்படியான ஆவணத்தை மனுதாரர்/வாதியின் தரப்பில் குறியீடு செய்வதாலும் எவ்வித பயனும் ஏற்படாது என்றும், எனவே மேற்படி

மனுதாரர்/வாதி தரப்பு இம்மனுக்களை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

**<u>2) தீர்வு:-</u>**

இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் யாவும் பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

2.1) மேற்படி மனுதாரர்/வாதியின் இந்த இரண்டு இடைநிலைமனுக்களும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை என்பதால் பொதுவான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2.2) மேற்படி மனுதாரர்/வாதியின் இம்மனுக்களை அனுமதிப்பது குறித்து பரிசீலனை செய்கையில், மனுதாரர்/வாதி தரப்பில், இந்நிர் மனுதாரர்/வாதியின் தம்பியான, இந்நிர் எதிர்மனுதாரர்/பிரதிவாதியும் மற்றும் அவரது மகனான அப்துல் ராஜீத் ஆகியோர் வழக்கு சொத்து தொடர்பாக 25.07.1999ம் தேதியிட்ட பதிவு செய்யப்படாத தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை மனுதாரர்/வாதிக்கு ஆதரவாக எழுதிக்கொடு கொடுத்ததாகவும், அதன் அடிப்படையில்

மனுதாரர்/வாதியானவர் தாவா வழக்குச்சொத்தை முழுமையாக அனுபவம் செய்து வருவதாகவும், இந்நிலையில், இந்நிர் எதிர்மனுதாரர்/பிரதிவாதி மேற்படி தான செட்டில்மெண்ட் ஆவணத்தை மனுதாரர்/வாதிக்கு எழுதிக்கொடுக்கவில்லை என்று வாதம் செய்து வருவதாகவும், மேலும், மனுதாரர்/வாதியானவர் அசல் வழக்கை தாக்கல் செய்யும் போது மனுதாரர்/வாதி மேற்படி தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் அசலை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்ததாகவும், ஆனால் மேற்படி ஆவணமானது பதிவு செய்யப்படாத காரணத்தை கூறிப்பிட்டு இந்நிர் எதிர்மனுதாரர்/பிரதிவாதி மேற்படி ஆவணத்தை மனுதாரர் தரப்பு ஆவணமாக குறியீடு செய்ய ஆட்சேபனை தெரிவித்த காரணத்தால் மேற்படி ஆவணத்தை குறியீடு செய்ய முடியவில்லை என்றும் மனுதாரர் தரப்பில் வாதம் செய்துள்ளதை கருத்தில்கொண்டும், மேற்படி மனுதாரர்/வாதி தரப்பு விசாரணையை மீண்டும் Reopen செய்வதால் இருதரப்பினருக்கும் எவ்வித சட்டப்படியான சாதகபாதகம் ஏற்படபோவதில்லை என்பதை கருத்தில்கொண்டும், மேற்படி மனுதாரர்/வாதி தரப்பு சாட்சியை மீண்டும் Reopen செய்து மனுதாரர்/வாதி தரப்பு ஆவணமான 25.07.1999ம் தேதியிட்ட

தானசெட்டில்மெண்ட ஆவணத்தை குறியீடு செய்வதன் மூலம் வழக்கு தரப்பினர்களுக்கு இடையேயுள்ள பிரச்சனையில் தீர்வு காண்பதற்கு அது உதவியாக இருக்கும் என்பதை கருத்தில்கொண்டும், இம்மனுக்களை அனுமதிப்பதினால் தரப்பினர்கள் யாருக்கும் எவ்விதமான சட்டப்படியான சாதக பாதகமும் இருக்காது என்பதை கருத்தில் கொண்டு இம்மனுக்களை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,** இம்மனுக்களானது இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் இன்று 08.04.2025ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.04.08 17:26:01 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

**இணைப்பு:**

1. **மனுதாரர் தரப்பு சாட்சிகள்** : இல்லை
2. **மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்**: இல்லை
3. **எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்** : இல்லை
4. **எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:** இல்லை

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.04.08 17:26:08 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.3/2025
மற்றும்
இடைநிலை மனு எண்.4/2025
இன்
அசல் வழக்கு எண்.62/2020
பொது வரைவு/செவ்வை உத்தரவு
நாள்: 08.04.2025